**தேசிய கல்வி நிறுவகம் - 2021**

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

தேசிய கல்வி நிறுவகத்தின் 2021 டிசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத் திகதியில் முடிவுற்ற ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, உரிமை மூலதன மாற்றக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவுற்ற ஆண்டிற்கான காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் நிதிக்கூற்றுக்களுக்குரிய குறிப்புகள், பொழிப்புடனான முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகள் என்பவற்றை உள்ளடக்கிய 2021 டிசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்படும் 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டம் என்பவற்றின் ஏற்பாடுகளுக்கமைய, எனது பணிப்பின் கீழ், கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புரைகளும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்களினால் ஏற்படும் தாக்கத்தினை தவிர, நிறுவகத்தின் 2021 டிசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவுற்ற ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப் பாய்ச்சலினையும் உண்மையாகவும் நியாயமாகவும் காட்டும் விதத்தில் இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டுள்ளன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் குறிப்பிடப்படப்பட்டுள்ள விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். இக்கணக்காய்வு நியமங்களின் கீழான எனது பொறுப்பு இந்த அறிக்கையின் நிதிக்கூற்றுக்களினது கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்பு எனும் பகுதியில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக முகாமைத்துவத்தினதும் அதனோடு தொடர்புடைய தரப்பினரதும் பொறுப்பு

இந்த நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கையில் நிறுவனத்தின் தொடர்ந்தியங்கும் ஆற்றலினை மதிப்பீடு செய்தல் முகாமைத்துவத்தின் பொறுப்பாகும். நிறுவகத்தை கணக்கொழிப்பதற்கு முகாமைத்துவம் கருதுமாயின் அல்லது மாற்றீடு இல்லாதவிடத்து செயற்பாடுகளை இடை நிறுத்த நடவடிக்கை எடுத்தாலேயொழிய, தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கருவின் அடிப்படையில் கணக்குகளை பேணுதல் மற்றும் நிறுவனம் தொடர்ந்தியங்குவதற்குரிய விடயங்களை வெளிப்படுத்தல் என்பன முகாமைத்துவத்தின் பொறுப்பாகும்.

நிறுவகத்தின் நிதி அறிக்கையிடல் நடைமுறை தொடர்பான பொறுப்பு குறிப்பிட்ட தரப்பினரதாகும்.

2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம், வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு அனைத்து வருமானம், செலவினம், சொத்துக்கள் மற்றும் பொறுப்புகள் தொடர்பாக ஏடுகளும் அறிக்கைகளும் பேணப்படுதல் அவசியமாகும்.

## 1.4 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு சம்பந்தமாக கணக்காய்வாளரின் பொறுப்பு

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலை வழங்குதல் மற்றும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்கிய அறிக்கையை வழங்குவது என்பது எனது நோக்கமாகும். நியாயமான சான்றுறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான சான்றுறுதிப்படுத்தலாக இருப்பினும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும்போது அது எப்போதும் போதியளவு தவறான கூற்றுக்களை வெளிப்படுத்துவதற்கான உறுதிப்படுத்தல் அல்ல. மோசடிகள் அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் ஏற்படக்கூடும். இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோர் மேற்கொள்ளும் பொருளாதாரத் தீர்மானங்களுக்கு தாக்கம் ஏற்படலாம் என எதிர்பார்க்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமத்தின் பிரகாரம் கணக்காய்வின் ஒரு பகுதியாக என்னால் கணக்காய்வின் போது தொழில்சார் வெளிப்படைத்தன்மை மற்றும் தொழில்சார் ஐயப்பாடுகளுடன் நடவடிக்கை எடுக்கப்பட்டது. என்னால் மேலும்,

- மோசடி அல்லது தவறு காரணமாக நிதிக்கூற்றுக்களிற்கு ஏற்படக்கூடிய தவறான கூற்றுக்களின் பொருண்மையான ஆபத்துக்களை இனங்கண்டு மதிப்பீடு செய்தல், அந்த இடர்களை எதிர்கொள்ளக்கூடிய கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைத்துச் செயற்படுத்துதல் மற்றும் எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்குப் போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்ளுதல். மோசடியானது கூட்டுச்சதி, கள்ளத்தனம், வேண்டுமென்று விட்டுவிடுதல்கள், தவறான வெளிப்படுத்தல்கள் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டிலான எல்லை மீறல்களை உள்ளடக்குவதால் மோசடி மூலம் ஏற்படும் பொருண்மையான பிறழ் கூற்றொன்றைக் கண்டுபிடிக்காது விடுவதால் ஏற்படும் ஆபத்தானது தவறின் மூலமான விளைவொன்றைவிடக் கூடியதாகும்.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக நிறுவகத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி கல்வி நிறுவனத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு நிறுவகத்தின் தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு பயன்பாட்டின் பொருத்தப்பாடுகள் தொடர்பிலும், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவிற்கு அமைய தொடர்ந்து செயற்படுவதற்கு நிறுவகத்திற்குள்ள ஆற்றல் தொடர்பில் குறிப்பிடத்தக்க ஐயப்பாட்டிற்கு காரணமாகவுள்ள நிகழ்வுகள் அல்லது நிலைமைகளுடன் தொடர்புடைய பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றதா என முடிவிற்குவருதல். பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால், அல்லது எனது அபிப்பிராயத்தினை மாற்றியமைப்பதற்கு

அவ்வாறான வெளிப்படுத்தல்கள் போதியனவாக காணப்படா-திருக்கையில், நிதிக்கூற்றுக்களிலுள்ள வெளிப்படுத்தல்களுடன் தொடர்புபட்டுள்ள எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டும். எனது கணக்காய்வு அறிக்கைத் திகதி வரையிலும் பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகள் எனது முடிவுகளிற்கு அடிப்படையாகக் காணப்படுகின்றன. எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் பல்கலைக்ககழகத்தின் தொடர்ந்தியங்கும் நிலையினை இடைநிறுத்துவதற்கு காரணங்களாக அமையலாம்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்கள் பிரதிநிதித்துவம் செய்கின்றனவா என்பதனை மதிப்பீடு செய்தல்.

இயலுமான வகையிலும் தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பின்பவருனவற்றை பரீட்சிப்பதற்காக கணக்காய்வு நோக்கொல்லை விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

- தகவல்களைச் சமர்ப்பித்தல் தொடர்பாக பார்க்கும் போது நிறுவகத்தின் செயற்பாடுகள் தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யப்படக்கூடிய வகையில் அதன் ஒழுங்கமைப்பு, முறைமைகள், நடைமுறைகள், பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதியளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும் அதன் முறைமைகள் நடைமுறைகள், பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமாகவும் பேணிச் செல்லப்படுகின்றதா எனவும்,

- உரிய எழுத்துமூல சட்டத்திற்கோ அல்லது நிறுவகத்தின் வழங்கப்பட்ட ஏனைய பொது அல்லது விசேட ஏற்பாடுகளுக்கு இணங்க பிரதேச சபையின் நிறுவனம் செயற்படுகின்றதா எனவும்,

- தனது அதிகாரங்கள், கடமைகள், மற்றும் பணிகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதா எனவும்,
- வளங்கள் சிக்கனமாகவும், செயற்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் காலஎல்லைக்குள் மற்றும் உரிய சட்ட விதிகளுக்கு இணங்க கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டுள்ளதா எனவும் ஆகும்.

## 1.5 நிதிக்கூற்றுக்களை தயாரிப்பது சம்பந்தமான கணக்காய்வு அவதானிப்புக்கள்

### 1.5.1 இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுடன் இணங்காமை

| உரிய நியமத்துடனான இணங்காமை | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டினுள் நிறுவனத்திற்கு கிடைத்திருந்த ரூபா 176,008,097 ஆன மூலதன மானியங்கள் தொடர்பில் இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியம இலக்கம் 11 இன் பிரகாரம் நிதிக்கூற்றுக்களில் உரிய வெளிப்படுத்தல்கள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியம இலக்கம் 11 இன் பிரகாரம் உரிய வெளிப்படுத்தல்களை மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கின்றேன். | இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமத்தின் பிரகாரம் நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட வேண்டும். |

### 1.5.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| | கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டின் டிசம்பர் 31 ஆம் தேதியின்படி நிறைவு செய்யப்பட்ட 04 செயற்திட்டங்கள் தொடர்பான ரூபா 1,801,121 கையிருப்பில் இருந்த தொகையானது மூலதனமாக்கப்படாமல் நடைமுறை பணிகளின் கீழ் காட்டப்படுவதால், நிதிக்கூற்றுக்களில் கட்டிட மதிப்பு குறைவாகவும், நடைமுறை வேலைகளின் மதிப்பு அதிகமாகவும் குறிப்பிடப்பட்டுள்ளது. | 2022 ஆம் ஆண்டுக்குரிய நிதி அறிக்கைகளில் தொடர்புடைய திருத்தங்கள் செய்யப்படும். | நிறைவு செய்யப்பட்ட செயற்திட்டங்களுடன் தொடர்புடைய பிடிகாசு மூலதனமாக்கல் செய்யப்பட வேண்டும். |
| (ஆ) | நிறுவனம் பின்பற்றும் கணக்கீட்டு கொள்கைகளின்படி பாடநெறி வருமானம் அட்டுறு அடிப்படையில் கணக்கிடப்படுகிறது என்று கூறப்பட்டாலும், பாடநெறி வருமானம் பண அடிப்படையில் கணக்கிடப்பட்டிருந்தது. தெரிவுக் கணக்காய்வுக்கு உட்படுத்தப்பட்ட 02 பாடநெறிகளின் மீளாய்வாண்டுக்குரிய பாடநெறி வருமானம் ரூபா 6,968,250 தொகையான போதிலும், 2020 மற்றும் 2022 ஆம் ஆண்டுகளில் பெறப்பட்ட தொகை ரூபா 4,488,750 பாடநெறிக் கட்டணம் மீளாய்வாண்டுக்கு சீராக்கப்பட்டமையால், நிதிக்கூற்றுக்களில் ஆண்டுக்கான பாடநெறி வருமானமாக ரூபா 11,457,000 காண்பிக்கப்பட்டிருந்தது. | இலங்கை வங்கியின் தேசிய கல்வி நிறுவனக் கணக்கின் ஊடாக ஆசிரியர்களும் மாணவர்களும் நிறுவனம் நடத்தும் பல்வேறு பாடநெறிகளுக்கான கட்டணத்தைச் செலுத்துகின்றனர். அதன்படி, வங்கிக் கணக்கு விவரங்கள் மற்றும் ரசீதுகளிலிருந்து பெறப்பட்ட தகவல்களின் அடிப்படையில் பாடநெறி வருமானம் நிறுவனத்தால் கணக்கு வைக்கப்படுகின்றது. | பாடநெறி வருமானம் கணக்கீட்டு கொள்கைகளின்படி கணக்கிடப்பட வேண்டும். |
| (இ) | மீளாய்வாண்டின் போது கொள்வனவு செய்யப்பட்டிருந்தரூபா | தவறுதலாக் செலவாகக் கணக்கிடப்பட்டுள்ளதுடன், இது 2022 ஆம் ஆண்டின் | கொள்வனவு செய்யப்பட்ட கணினி மென்பொருள் |

| | | | |
|---|---|---|---|
| | 3,027,020 கிரயமான கணினி மென்பொருளின் பெறுமதி கட்புலச் சொத்துக்களின் கீழ் மூலதனமாக்குவதற்கு பதிலாக ஆண்டிற்குரிய செலவினமாக பதிவழிக்கப்பட்டிருந்த காரணத்தால் இந்த அளவினால் ஆண்டின் வருமானத்தை விஞ்சிய செலவினம் அதிகரித்தும், கட்புலச் சொத்துக்கள் குறைத்தும் நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டிருந்தது. | நிதிக்கூற்றுக்களில் உள்ள பேரேட்டுப் பதிவுகள் மூலம் சரி செய்யப்படும். | தொடர்பான செலவுகள் அருவ சொத்துகளின் கீழ் கணக்கிடப்பட வேண்டும். |

### 1.5.3 சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்கள் என்பவற்றுடன் இணங்காமை

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்களுடனான தொடர்பு | இணங்காமை | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் தாபன விதிக் கோவையின் VIII ஆம் அத்தியாயத்தின் 10.1 ஆம் பிரிவு | தாபனவிதிக் கோவையின் ஏற்பாடுகளுக்கு முரணாக தேசிய கல்வி நிறுவனத்தினால் வெளியிடப்பட்ட 1996 மார்ச் 26 ஆந் திகதிய 179 ஆம் இலக்க உள்ளகச் சுற்றறிக்கையை அடிப்படையாக கொண்டு, மொத்த சம்பளத்தின் அடிப்படையில் 1/20 படி செலுத்தப்பட்டிருந்தது. | தேசிய கல்வி நிறுவனத்தில் பணிபுரியும் பதவிநிலை உத்தியோகத்தர்களுக்கு பொது விடுமுறை மற்றும் வார இறுதி நாட்களில் பணிபுரிவது தொடர்பில் படிகளை செலுத்து போது தேசிய கல்வி நிறுவனத்தின் நிர்வாக மற்றும் நிதிக் குறியீட்டின் 6 வது அத்தியாயத்தின் 17.5 வது பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள விதிகளின்படி கொடுப்பனவுகள் செய்யப்பட்டுள்ளன. | முறையான ஒப்புதல் இல்லாமல் நிர்வாக மற்றும் நிதி ஒழுங்குமுறைகளின் கோட்களின் படி பணம் செலுத்தப்படக்கூடாது மற்றும் தாபனவிதிக் கோவையின் ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஆ) 1985 இன் 28 ஆம் இலக்க தேசிய கல்வி அதிகாரச்சட்டத்தின் 4(க) மற்றம் 28 ஆம் பிரிவு | மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் நிறுவனத்தின் நிர்வாக மற்றும் நிதிப் பிரமாணக் கோவை அங்கீகரிக்கப்பட்டிருக்கவில்லை. | தேசிய கல்வி நிறுவனத்தின் நிர்வாக மற்றும் நிதிப் பிரமாணம் தற்போது வரைபாக்கப்பட்டு இறுதி கட்டத்தில் உள்ளது, அதன்படி வரைபு மிக விரைவில் ஒப்புதலுக்கு சமர்ப்பிக்கப்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. | தேசிய கல்வி நிறுவனத்தை நிறுவும் சட்டத்தின்படி, நிர்வாக மற்றும் நிதிப்பிரமாணம் அங்கீகரிக்கப்பட வேண்டும். |

**2. நிதிசார் மீளாய்வு**

**2.1 நிதிப் பெறுபேறுகள்**

மீளாய்வாண்டின் செயற்பாட்டு பெறுபேறு ரூபா 72,631,933 ஆன பற்றாக்குறையொன்று காணப்பட்டதுடன் அதற்கு நேரொத்த முன்னைய வருடத்தின் மிகை ரூபா 124,084,044 ஆகும். அதன் பிரகாரம் நிதிசார் விளைவுகளில் ரூபா 196,715,977 ஆன வீழ்ச்சியொன்று அவதானிக்கப்பட்டது. இந்த வீழ்ச்சிக்கு பராமரிப்பு மற்றும் உடன்படிக்கை சேவைச் செலவினங்கள் அதிகரித்தமை பிரதானமாக தாக்கமளித்திருந்தது.

**3. செயற்பாட்டு மீளாய்வு**

**3.1 முகாமைத்துவ செயற்திறனின்மை**

| | கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | தேசிய கல்வி நிறுவனத்தின் அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினுள் உள்ள சட்ட உத்தியோகத்தர் பதவி வெற்றிடமாக உள்ள போது அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினுள் உள்ளடக்கப்படாது சட்ட இணைப்பாளர் பதவிக்காக 2020 நவம்பர் 02 ஆந் திகதி முதல் உத்தியோகத்தர் ஒருவர் நியமிக்கப்பட்டிருந்ததுடன், அவருக்காக அத்திகதி முதல் மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் ரூபா 952,550 சம்பளம் மற்றும் படிகளாக செலுத்தப்பட்டிருந்தது. | நிறுவனத்தில் பணிபுரியும் சட்ட உத்தியோகத்தர் 2020.11.01 ஆந் திகதி ஓய்வு பெற்றதால், புதிய அதிகாரி ஒருவரை நியமித்து, சட்டப் பணிகள் புதிய அதிகாரியிடம் நிறுவனங்களால் முறையாக ஒப்படைக்கப்படும் வரை, அந்தப் பணிக்குப் பொறுப்பான வழக்கறிஞர், சட்ட ஒருங்கிணைப்பாளராகப் பணிபுரிந்து, அந்த நாட்களுக்கு மாத்திரம் அந்தச் சேவையை கட்டணத்தில் பெற ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. | அங்கீகரிக்கப்பட்ட பதவியணியில் இருக்கும் வெற்றிடங்களுக்கு மட்டுமே ஆட்சேர்ப்பு செய்து சம்பளம் மற்றும் கொடுப்பனவுகளை வழங்குதல் வேண்டும். |
| (ஆ) | 100 உள்ளூர் மற்றும் வெளிநாட்டு ஆசிரியர் மாணவர்களுக்கு வதிவிட வசதிகளை வழங்கும் நோக்கில் 2015 ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத் திட்ட முன்மொழிவின் அடிப்படையில் 198 மில்லியன் ரூபா மதிப்பீட்டில் நிர்மாணிக்கப்படும் மீப்பே தெற்காசிய ஆசிரியர் அபிவிருத்தி நிலையத்தின் விடுதிக் கட்டிடத்தின் | அந்த நேரத்தில் நாட்டில் கட்டுமானத் தொழில் வீழ்ச்சியடைந்ததன் காரணமாகவும், நாட்டில் ஏற்பட்ட கோவிட்-19 தொற்றுநோய் காரணமாக வேலைத் தளத்திற்கு தேவையான எண்ணிக்கையிலான தொழிலாளர்களை வழங்குவதில் உள்ள சிரமங்களாலும், ஒப்பந்ததாரர் திட்டமிடப்பட்ட கட்டுமானப் பணிகளை முடிக்கத் தவறிவிட்டார். | ஒப்பந்த காலத்துக்குள், செயற்திட்டங்கள் முடிக்கப்பட்டு, உரிய நோக்கங்களுக்காகப் பயன்படுத்தப்பட்டு, திட்டத்தைத் தொடர முறையான அனுமதி பெற ஏற்பாடுகள் செய்யப்பட வேண்டும். |

| | | |
|---|---|---|
| நிர்மாணப் பணிகள் இடம்பெற்று வருகின்ற போதிலும், 2019 திசெம்பர் 05 ஆந் திகதியினுள் முடிக்கப்பட்டிருக்க வேண்டிய போதிலும், மீளாய்வாண்டின் இறுதிவரை, 06 தடவைகள் திகதி நீடிக்கப்பட்ட போதிலும், அறிக்கை வெளியிடப்பட்ட நாள் வரை நிர்மாணப் பணிகள் நிறைவுபெறவில்லை. மேலும், இந்த நிர்மாணப் பணிகளை மேற்கொள்வதற்கான நகர அபிவிருத்தி அதிகாரசபையின் அங்கீகாரம் அறிக்கை வெளியிடப்பட்ட நாள் வரை பெறப்படவில்லை. | மேலும், நாட்டில் நிலவும் மூலப்பொருட்கள் தட்டுப்பாடு காரணமாக, மூலப்பொருள் கொள்முதலில் ஏற்பட்டுள்ள சிக்கல் நிலை காரணமாக இதுவரை திட்டத்தை முடிக்க முடியாமல் போனதுடன், பௌதீக முன்னேற்றம் 93% அளவில் உள்ளது. | |

## 3.2 தொழிற்பாட்டு செயற்திறனின்மை

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) 2017 மற்றும் 2019 ஆம் ஆண்டுகளுக்குரிய 09 ஆராய்ச்சி நன்கொடைகளுக்காக ரூபா 8,020,000 ஆன நிதியேற்பாடு மேற்கொள்ளப்பட்டிருந்த போதிலும், 07 ஆராய்ச்சி மானியங்களுக்காக ரூபா 2,274,970 மாத்திரம் செலவிடப்பட்டிருந்தது. | 2017 ஆம் ஆண்டு நாளிதழ் விளம்பரங்கள் வெளியிடப்பட்டு 09 விண்ணப்பங்கள் பெறப்பட்டன மற்றும் மூன்று தகுதி வாய்ந்த நபர்கள் 2017 டிசம்பர் மாதத்தில் நிறுவனத்துடன் ஒப்பந்தங்களில் கையெழுத்திட்டனர். ஒருவர் ஒரு வருடத்திலும் மற்ற இருவர் இரண்டு வருடங்களிலும் ஆராய்ச்சியை முடிக்க வேண்டும். அதன்படி, அவர்களுக்கு வழங்க வேண்டிய முதல் கட்டத் தொகை மட்டும் 2017 டிசம்பர் மாதம் வழங்கப்பட்டது. 2019 ஆம் ஆண்டில், 04 ஆராய்ச்சி மானியங்கள் வழங்கப்பட்டன, அவர்கள் 2019 செப்டம்பர் மாதத்தில் தங்கள் ஆராய்ச்சியைத் | ஆண்டுக்குரியதாக செய்யப்பட்ட ஏற்பாடுகள் ஆண்டு முழுவதும் உச்ச அளவில் பயன்படுத்தப்பட வேண்டும். |

தொடங்கி 2020 செப்டம்பரில் முடிக்க வேண்டும் எனினும், நாட்டில் கோவிட்-19 தொற்றுநோய் நிலைமை காரணமாக தரவு சேகரிப்பில் தாமதம் ஏற்பட்டதால், அவர்களின் ஆராய்ச்சி முடிந்தது அறிக்கை 2021 ஆம் ஆண்டிலேயே நிறுவனத்திடம் ஒப்படைக்கப்பட்டது